பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 15 செவ்வாய்க்கிழமை 29.06.2021 கதிர் 102

கொரோனாச் சட்டத்தை மீறிய

## 45 ஆயிரம் பேர் இதுவரை கைது

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 455 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அஜித் ரோஹண தெரிவித்தார்.

☞2

# ராஜபக்ஷ அரசுக்கு எதிராக யாழில் சைக்கிளில் பவனி

## கூட்டமைப்பின் உறுப்பினர்களும் பங்கேற்பு





(இ.கலையமுதன்)

**பல்வேறு விதமான பிரச்சினைகளை வலியுறுத்தி ராஜபக்ஷ அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் கண்டன சைக்கிள் பவனி இன்று காலை முன்னெடுக்கப்பட்டது.**

☞2

## விபத்துகளில் நேற்று மட்டும் பன்னிரெண்டு பேர் உயிரிழப்பு

நாட்டில் விபத்துக்களால் நேற்று மாத்திரம் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

8 பேர் நேற்று நடைபெற்ற விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் எனவும், ஏனையவர்கள் இதற்கு முன்பு நடைபெற்ற விபத்துக்களில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.


மோட்டார்சைக்கிளைச்செலுத்திச் சென்ற 8 பேரும், பாதசாரிகள் மூவரும், ஓட்டோவில் பயணித்த பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## பத்து வாரங்களில் 'டெல்டா' பிரதான வைரஸாக மாறும்

### மக்களுக்கு சுதர்ஷினி எச்சரிக்கை

பொதுமக்கள், பொதுச் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் நடந்தால் இன்னும் பத்து வாரங்களில் இந்தியாவில் உருமாறிய டெல்டா வைரஸ் தொற்று இலங்கையில் பிரதான வைரஸ் தொற்றாக மாறும்.

- இவ்வாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே.



☞2

## இணைய வழிக் கற்றல் விருத்தி யாழில் விசேட கலந்துரையாடல்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான இணைய வழிக் கற்றலை விருத்தி செய்வது தொடர்பில் மாவட்ட செயலகத்தில் இன்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

கொரோனா கால கற்றல் நடவடிக்கைகளைச் சீரமைக்கும் விதமாக இ-தக்சிலாவ திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் பிரதேச கற்றல் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன்போது இணைய வழியில் கற்றலை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு உள்ள பிரச்சினைகள் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டன.

அவை தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேசி உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், மாவட்ட அரச அதிபர்

☞2

## வீதிப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுபவர் சீனப் பிரஜை அல்ல

### அங்கஜன் விளக்கம்; சுமந்திரன் வருத்தம்



(இ.கலையமுதன்)

பருத்தித்துறை-மருதங்கேணி வீதிப் புனரமைப்புப் பணிகளில் சீனப் பிரஜை ஒருவர் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது டுவிட்டரில் படமொன்றைப் பதிவேற்றியுள்ளார்.

அதில் யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் பலர் வேலையில்லாமல் திண்டாடுகின்ற

☞2

## கொரோனாத் தடுப்பூசி குழுவுக்குள் குழப்பமா?

### பேராசிரியர் நீலிகாவும் இராஜினாமா



ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மானுடவியல் மற்றும் மூலக்கூறு ஆய்வுகள் துறையின் தலைவர் பேராசிரியர் நீலிகா மலவிகே, மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகள் குறித்த சுயாதீன நிபுணர் ஆலோசனை குழுவில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களால் அவர் குறித்த பதவியை

☞2

## பூண்டுலோயாவில் பெண் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை



துணிகளால் சுற்றப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது சடலம்



நுவரெலியா மாவட்டம், பூண்டுலோயா பழைய சீன் தோட்டத்தின் லயன் குடியிருப்பு ஒன்றில் குடும்பப் பெண் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணின் சடலத்தை மீட்ட பூண்டுலோயா பொலிஸார், பெண்ணைக் கொலைசெய்த சந்தேகத்தில் இளைஞர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பழைய சீன் தோட்டத்தில் வசித்த 47 வயதான பெருமாள் மாலா எனும்

☞2

## வீதிப் புனரமைப்புப் பணிகளில் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில், அவர்களுக்கு ஏன் இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட வில்லைஎனக்கேள்வியும்எழுப்பியுள்ளார்.

எனினும், அந்தப் படத்தில் இருப்பவர் சீனப் பிரஜை அல்லர் எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான அங்கஜன் இராமநாதன், அவர் இலங்கையர். இஸ்லாமிய சகோதரர். அவருடைய பெயர் மொஹமட் முஸ்தபா மொஹமட் ஹனிஃபா. அக்கரைப்பற் றைச் சேர்ந்த அவர் குடத்தனையில் திரு மணம் செய்து, அம்பனில் குடியேறியுள் ளார். வீதித் திட்ட ஒப்பந்தக்காரரான என். எம் நிர்மாண பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்று தனது டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள் ளார்.

இந்நிலையில், அதற்குப் பதிலளித் துள்ள சுமந்திரன் எம்.பி, இந்த நபர் சீன நாட்டவர் அல்லர். இலங்கையர் என்பது எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட் டுள்ளது. பிழைக்கு வருந்துகின்றேன். எதிர்காலத்தில் வடக்கில் பணிபுரியும் பிற உண்மையான சீனர்களின் படங்கள் இடுகையிடப்படும் என்று குறிப்பிட்டுள் ளார்.

## இணைய வழிக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாணக் கல் விப் பணிப்பாளர் உதயகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர்.

## கொரோனாத் தடுப்பூசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இராஜினாமா செய்தார் என்று நெருக்க மான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, கொழும்பு வடக்கு (ராகம) மருத்துவபீடத்தின் இணைப் பேராசிரியர் ஏ.பத்மேஷ் இந்தக் குழுவி லிருந்து இராஜினாமா செய்தார்.

இதனிடையே, குறித்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆனந்த விஜேவிக்ரம, பேராசிரியர் ரஜீவ டி சில்வா, பேராசிரியர் காந்தி நாணயக் கார, பேராசிரியர் சன்ன ரணசிங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, பேராசிரி யர் லக்குமார் பெர்னாண்டோ மற்றும் வைத்தியர் ஹசித திசேரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நிபுணர் குழுவின் பணி உல கின் பல நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வரும் கொரோனாத் தடுப்பூசித் திட்டம் மற் றும் தடுப்பூசி குறித்த உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகள் குறித்து ஆய்வு செய்வதும், இலங்கையில் தடுப் பூசி வேலைத்திட்டத்தைப் பரிந்துரைப் பதும் ஆகும்.

## பூண்டுலோயாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறே கொலைக்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் அதே தோட்டத்தில் வசிக்கும் 27 வயதான இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பூண்டு லோயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் சடலம் வீட்டின் சமயலறையில் இருந்து மீட்கப்பட்டது எனத் தெரிவித்த பொலிஸார், சடலம் மீட் கப்படும்போது துணிகளால் சுற்றப்பட்டி ருந்தது எனவும் தெரிவித்தனர்.

சடலம் நாவலப்பிட்டி நீதவானின் மரண விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைகளுக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல் லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பூண்டுலோயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பத்து வாரங்களில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள சுகாதாரப் பிரச்சினையிலிருந்து மீண்டு விடவில்லை. மற்றுமொரு புதிய வைரஸ் பரவி வருகின்றது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றால் 60 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகம் உயிரிழக்கின்றனர். இதன்காரணமா கவே முதல் கட்டமாக 60 வயதுக்கு மேற் பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்து வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப் பட்டுள்ளது. - என்றார்.

## ராஜபக்ஷ அரசுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு மீனவர் சமாசம் மற்றும் வலி காமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பவனி சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்ற லில் ஆரம்பித்து மானிப்பாய் பிரதேச சபை முன்றலில் நிறைவடைந்தது.

எரிபொருள் விலை அதிகரிப்பை கண்டித்தும், மக்களுக்கு அதிகரிக்கப் படும் கடன் சுமையை நீக்கக் கோரியும், சுகாதாரத்துறையினரின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வலியு றுத்தியும், இன, மத பிரதேச வேறுபாடு இன்றி தடுப்பூசிகளை வழங்கக் கோரி யும், பாகுபாடின்றி 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க வலியுறுத்தியும், ஏனைய அரசியல் கைதிகளையும் உட னடியாக விடுவிக்கக் கோரியும் இந்தப் பவனி இடம்பெற்றது.

இந்தச் சைக்கிள் பவனியில் நாடா ளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய வற்றின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்ட னர்.

## 45 ஆயிரம் பேர் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்து தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 45 ஆயிரத்து 99 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## மணவிலக்கு சட்டங்களில் மாற்றம்

**நாட்டில் சட்டத்தின் ஆட்சி நீடிப்பதற்கு மிக முக்கியமானது, மக்களின் தேவைகளையும், அடிப்படை வாழ்வியல் முறைமைகளையும் ஒழுங்குபடுத்தும் முறைமையில் நாட்டின் சட்டம் அமைந்திருப்பதாகும்.**

**மக்களின் வாழ்வு முறைமை நவீன யுகத்துக்குள், புதிய முறைமைகள், கண்டு பிடிப்புகளுடன் புகுந்து கொண்டிருக்கின்றது. தினசரி விடயங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அதனால் சட்டத்தின் தேவைப்பாடுகளும், கடப்பாடுகளும் மாறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தத் தேவைப்பாட்டை நிறைவு செய்யும் வகையில் நாட்டின் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் நடைமுறையில் மாறவில்லை என்பதுதான் விசனத்துக்குரியது.**

**மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய வழிகாட்டுதல்களை – விழுமியங்களை – நெறிப்படுத்திப் போதிப்பது அறம். அந்த அறவாழ்வில் மனித சமூகத்தை நிலை நிறுத்துவது சட்டம். திருடுதல் தவறான – கேடான – நடத்தை என்று அறம் புகட்டுகின்றது. திருடினால் தன்டனை என்று சட்டம் எச்சரிக்கின்றது.**

**இத்தகைய சட்டம் மனிதனின் வாழ்க்கை முறைமைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டிருப்பது சுபீட்சமான சமூகவமைப்புக்கு அத்தியாவசியமானது.**

**ஆனால், அத்தகைய முறையில் நமது சட்டம் சீர் செய்யப்படவில்லை. காலத்துக்கேற்ப மாறாத – காலத்துக்கு ஒவ்வாத – சட்டங்களையே பெரும்பாலும் நாம் இன்னும் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருக்கின்றோம்.**

**உதாரணமாக கொவிட் தொற்றுநோய்ப் பரவலுக்கான தடுப்புச் சட்டம் ஏதும், இந்தத் தொற்று உலகையே ஆட்டிப் படைக்கத் தொடங்கி சுமார் ஒன்றரை ஆண்டு காலம் கடந்தும் இன்னும் நாட்டுக்கு வரவேயில்லை.**

**1925 ஆம் ஆண்டினதும், 1960 ஆம் ஆண்டினதும் தனிமைப்படுத்தல் ஒழுங்கு விதிகள் சட்டத்தின் கீழும், அவ்வப்போது வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலின் கீழுமே விடயங்கள் கையாளப்படுகின்றன. இதிலும் விட வேதனை என்னவென்றால் பல விவகாரங்கள் சட்ட ஆட்சி இல்லாமலேயே எதேச்சாதிகாரமாக முன்னெடுக்கப்படுகின்றன. அதனை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.**

**ஆகவே சமூக வாழ்வியக்கத்தை இயல்பாக முன்னெடுப்பதற்கு வழிவகுக்கும் விதத்தில் சட்டங்களும் நவீனத்துவம் அடைவது முக்கியம். கால் நூற்றாண்டுக்கு முன்னர் கணினிகள், தொலைபேசிகள், சமூக ஊடகங்கள் தொடர்பான ‘சைபர்’ குற்றங்கள் என்ற விடயமே இருக்கவில்லை. இப்போது வாழ்வியலை நெறிப்படுத்துவதற்கு அத்துறையை சட்டங்கள் மூலம் ஒழுங்குபடுத்துவது தவிர்க்க முடியாததாகி வருகின்றது.**

**இந்த வகையில் மணவிலக்குச் சட்டங்களும் மிக மிகப் பழமை வாய்ந்தனவாக இருக்கின்றன. திருமணம், மணவிலக்கு, சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான 1907 ஆண்டின் சட்டமே 115 ஆண்டுகள் கடந்தும் இலங்கையில் இன்னும் பின்பற்றப்படுகின்றது – அவ்வப்போது செய்யப்பட்ட சிற்சில மாற்றங்களுடன்.**

**பிரிட்டிஷ் கொலனித்துவ காலத்தில், அவர்களால் நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம் இது. அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த பிரிட்டிஷார், தமது நாட்டில் அந்த சட்டமுறைமையை 1969 இல் முற்றாகக் கைவிட்டு புதிய சட்டத்தை ஏற்படுத்திவிட்டார்கள். அதற்குப் பின் ஐம்பது ஆண்டுகள் கடந்தும் கூட நமது நாடு அந்தச் சட்டத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது – சில மாற்றங்களை மட்டும் இங்கும் அங்கும் அவ்வப்போது செய்தபடி.**

**மணவிலக்குச் சட்டங்களின் கடினமான இரும்புப் பிடி நமது சட்டங்களுக்குள் நிலைகொண்டு விட்டதால், பொருத்தமற்ற திருமணங்களில் சிக்கிக் கொண்ட பலரின் வாழ்வு அவமாகிப் போனமையைக் காணும் துரதிஷ்ட நிலைமை சமூகத்தில் நீடிக்கின்றது.**

**‘திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்’ என்ற சமூக சிந்தனை விழுமியம் காரணமாக பல்லாயிரம் பேரின் வாழ்வே வேதனையும், விசனமும், எதிர்மறை நெருக்கடிகளும் நிறைந்து அவமாகிப் போகின்ற சூழல் தொடருகின்றது.**

**மணவிலக்கு வழங்குவதற்கான அடிப்படைக் கோட்பாடுகளே இரும்புச் சட்டம் போல நூற்றாண்டு கடந்தும் மாறாமல் இருப்பது சமூக மேம்பாட்டுக்குப் பொருத்தமற்றது என்று சுட்டிக்காட்டப்பட்டமையை அடுத்து – அதில் மாற்றம் செய்யப்படுவது அவசியம் என்பதைப் புரிந்து கொண்டு – அது குறித்து ஆராய சட்டவறிஞர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது.**

**கடந்த காலத்திலும் இவ்வாறு நியமிக்கப்பட்ட குழுக்கள் சமர்ப்பித்திருந்த பரிந்துரைகளையும் கவனத்தில் எடுத்து இந்தக் குழு தனது அறிக்கையை நேற்று நீதியமைச்சர் அலி சப்றியிடம் கையளித்துள்ளது.**

**மீள இணைந்து வாழ முடியாது என்ற நிலையை முன்னைய மண ஒப்பந்தம் எட்டுமாயின் ஒரு தரப்பின் விண்ணப்பத்தில், அல்லது இரு தரப்பு இணக்கத்தில், மணவிலக்கு அளிப்பதற்கு இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.**

**மணவிலக்குச் சட்டங்களில், தற்போதைய வாழ்வில் நடைமுறைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் கொண்டு வருவது தவிர்க்க முடியாத கட்டாயமே.**

# ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அரசு வெள்ளைக் கொடி

## சரத் பொன்சேகா கூறுகிறார்



தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்காக அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெள்ளைக்கொடி காண்பித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

‘தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டதில் எமக்கு எவ்வித சிக்கலும் கிடையாது. காரணம் தற்போது சிறையிலிருப்பவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்னர் தமது இளமைப்பருவத்தில் தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களாவர்.

ஆனால் தற்போது அவர்கள் அந்த மன நிலையிலிருந்து மீண்டிருக்கக் கூடும். எனவே அவர்களில் விடுதலை செய்யக் கூடியவர்களை விடுவிப்பதற்கும் , புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை.

என்மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதலைமேற்கொள்ள உதவியமொரிஸிடமிருந்து இதனை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவரை விடுதலை செய்தால் வரவேற்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அரசாங்கத்தின் கழுத்தை நெரித்தமையே இந்த விடுதலையின் பின்னணியாகும். அதனாலேயே அரசியல் கைதிகளை விடுதலை செய்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அரசாங்கம் வெள்ளைக் கொடி காண்பித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் ஏதேனுமொரு வழியில் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைத்துள்ளமை வரவேற்கத்தக்கது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க முன்னாள் இராணுவ அதிகாரிகள் அனுமதி இன்றி இலங்கைக்குள் உள்நுழைவு

அமெரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரிகள் இலங்கைக்குள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்றி சுற்றுலா விசா ஊடாக பிரவேசித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யுஎஸ் எயிட் என்ற அரச சார்பற்ற நிறுவனம் இவர்களை இலங்கைக்கு அழைத்துள்ளதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்குள் இவ்வாறு பிரவேசித்த அமெரிக்க இராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் கடந்த வாரம் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் நடத்திய விசாரணையைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவ முன்னாள் அதிகாரி மார்க் பிம்பொம் என்பவரே இவ்வாறு நாட்டில் இருந்து வெளியேறினார் என்று கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொரோனாத் தொற்றுக்குப் பலி

## சிறப்பு விசாரணைக்கு உத்தரவு

கொவிட் தொற்றுநோயால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சிறப்பு விசாரணை நடத்த சுகாதார அமைச்சர் பணிப்பு விடுத்துள்ளார்.

பெரதெனிய – முருத்தலாவ பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சிறப்பு கவனம் செலுத்தியுள்ளார்.

இதன்படி, இந்தச் சம்பவம் தொடர்பாக விரைவில் சிறப்பு விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவுக்கு அறிவுறுத்தினார்.

இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் சுகாதாரத் துறையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட வேண்டிய ஒரு சிறப்பு சம்பவம் என்றும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற சூழ்நிலைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். இந்தச் சம்பவம் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மத்திய மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் மற்றும் சுகாதார சேவைகளின் பிராந்திய இயக்குநரிடமிருந்து அறிக்கைகளைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களான 71 வயதான சிறிபால ராஜபக்ஷ (தந்தை) ஜூன் 2 ஆம் திகதியும், 68 வயதான சந்திர ராஜபக்ஷ (தாய்) ஜூன் 17 ஆம் திகதியும், 39 வயதான தம்மிக ராஜபக்ஷ (மகன்) ஜூன் 23 ஆம் திகதியும் கொவிட் தொற்றால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சைகள் ஒக்ரோபரில் நடக்கும்

கொழும்பு, ஜூன் 30

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை எப் போது நடத்தப்படும் என்பது தொடர்பாக அறிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

கொவிட் பெருந் தொற்று நிலைமைகளால் உயர்தரப்பரீட்சைத் திட்டமிட்ட அடிப்படையில் நடத்த முடியவில்லை.

இந்த நிலையில் உயர் தரப் பரீட்சையை எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னதாகவும் உயர்தரப் பரீட்சை நடத்தும் திகதிகள் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொவிட் நிலைமைகளால் இன்னமும் பாடசாலைகள் திறக்கப்படாதுள்ள நிலையில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தில் அதிகரிக்கும் கொரோனா புதிதாக 22,868 பேருக்கு பாதிப்பு



அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் ஊரடங்கு தளர்வுகளை மேலும் ஒரு மாதத்திற்கு இங்கிலாந்து அரசு தள்ளிவைத்துள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்தில் கடந்த 24 மணி நேரத்தில் 22 ஆயிரத்து 868 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அங்கு பாதிப்பு எண்ணிக்கை 47 லட்சத்து 55 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கொரோனா வைரஸால் 3 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அங்கு பலியானோர் எண்ணிக்கை 1 லட்சத்து 28ஆயிரத்து 103 ஆக உள்ளது.

மேலும் கொரோனாவில் இருந்து 43 லட்சத்து 19 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர் என அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி ராஜினாமா செய்தார் சுவீடன் பிரதமர்



சுவீடன் நாட்டில் புதிதாக கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான வாடகை கட்டுப்பாடுகளை எளிதாக்க அரசு திட்டமிட்டது. இதற்கு இடதுசாரிக் கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்து, அரசுக்கான ஆதரவை திரும்பப் பெற்றது. அத்துடன், பிரதமர் ஸ்டீபன் லோபன் (வயது 63) மீது நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தது.

நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 349 உறுப்பினர்களில், 181 உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர். இதனால் தீர்மானம் வெற்றி பெற்றது. இதையடுத்து பிரதமர் ராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ராஜினாமா செய்துவிட்டு புதிய அரசு அமைக்கும் பணியை சபாநாயகரிடம் ஒப்படைக்க வேண்டும், அல்லது முன்கூட்டியே தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையத்திடம் கூற வேண்டும்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்து ஒரு வாரம் ஆன நிலையில், பிரதமர் ஸ்டீபன் லோபன் தனது பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார். புதிய தலைமையை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை சபாநாயகரிடம் ஒப்படைத்துள்ளார். பிரதமர் லோபன் பதவி விலகினாலும், புதிய அரசு அமையும் வரை, அவர் தலைமையிலான நிர்வாகம் வழக்கமான பணிகளை மேற்கொள்ளும்.

இதுபற்றி ஸ்டீபன் லோபன் கூறுகையில், கொரோனாத் தொற்று கடினமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதால், முன்கூட்டியே தேர்தல் நடத்துவது சிறந்த முடிவல்ல என்று கூறினார். மாற்று தலைமையை முடிவு செய்யாமல், தனக்கு எதிராக வாக்களித்ததாக ஸ்டீபன் லோபன் குற்றம் சாட்டினார்.

## ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள

# போராளி முகாம்கள் மீது அமெரிக்கா குண்டு வீச்சு



ஈராக் மற்றும் சிரியாவில் இருந்து செயல்படும் ஈரானின் ஆதரவு பெற்ற போராளிகளின் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈராக்கில் உள்ள அமெரிக்க படையினர் மற்றும் நிலைகளின் மீது கடந்த ஏப்ரல் முதல் 5 முறை நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் வகையில் குண்டுகளை வீசியதாக அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் உயிரிழப்பு ஏற்பட்டதா என தகவல் எதுவும் வெளியாகவில்லை. போராளி முகாம்கள் மீது F-15 மற்றும் F-16 விமானங்கள் மூலம் குண்டு வீசி விட்டு விமானிகள் பாதுகாப்பாக திரும்பி வந்து விட்டனர் எனவும் பென்டகன் தெரிவித்துள்ளது.

அதிபர் ஜோ பைடனின் உத்தரவின் பேரில் அமெரிக்கா இந்த விமானத் தாக்குதலை நடத்தி உள்ளது.

# சீரம் தயாரிக்கும் கோவிஷீல்ட் கொரோனாத் தடுப்பூசிக்கு 'கிறீன் பாஸ்' அனுமதி வழங்காத ஐரோப்பிய ஒன்றியம்

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்டு-அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம் இணைந்து கொரோனாத் தடுப்பூசி ஒன்றை கண்டுபிடித்தது. அந்த நிறுவனத்தின் வேக்ஸேவ்ரியா வெர்சன் (Vaxzevria version) இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் தயாரிக்கப்படுகின்றன.

ஒக்ஸ்போர்டு-அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்துடன் இந்தியாவின் சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா நிறுவனம் ஒப்பந்தம் செய்து இந்தியாவில் கொவிஷீல்ட் என்ற பெயரில் தடுப்பூசி தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் மிகப்பெரிய அளவில் கொவிஷீல்ட் தடுப்பூசி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.




கொரோனாவில் இருந்து தப்பிக்க தடுப்பூசி மட்டுமே ஒரே வழி என வல்லுநர்கள் தெரிவிக்க, உலகின் பணக்கார மற்றும் நடுத்தர நாடுகள் கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

பெரும்பாலான நாடுகள் இரண்டு தடுப்பூசி டோஸ்கள் செலுத்திக்கொண்டால் தங்களது நாட்டிற்குள் வரலாம் எனத் தெரிவித்துள்ளன. தற்போது உலகளவில் பைசர், மாடர்னா, ஜான்சன் அண்டு ஜான்சன், கொவிஷீல்ட் (இங்கிலாந்தில் வேக்ஸேவ்ரியா), கொவேக்சின், ஸ்புட்னிக் வி, சீனாவின் இரண்டு தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் இந்திய நிறுவனம் தயாரிக்கும் கொவேக்சின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு இன்னும் ஒப்புதல் வழங்கவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏராளமான நாடுகள் உள்ளன. இந்த நாடுகளில் உள்ள மக்கள் எளிதாக பயணம் மேற்கொள்ள கிறீன் பாஸ் என்ற நடைமுறையை செயல்படுத்த இருக்கிறது. கொரோனாத் தடுப்பூசி செலுத்தியவர்கள் அதற்கான கிறீன் பாஸ் சான்றிதழ் உடன் ஸ்பெயினில் இருந்து பிரான்ஸ், பிரான்ஸில் இருந்து இத்தாலி என சுலபமாக சென்று வரலாம். ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஐரோப்பிய மருந்துகள் அமைப்பு இந்தியாவில் சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா நிறுவனத்தால் தயாரிக்கப்படும் கொவிஷீல்ட் தடுப்பூசிக்கு கிறீன் பாஸ் அங்கீகாரம் வழங்கவில்லை.

இங்கிலாந்தில் தயாரிக்கப்படும் வேக்ஸேவ்ரியா, அமெரிக்காவின் பைஸர், மாடர்னா, ஜான்சன் அண்டு ஜான்சன் ஆகிய நான்கு தடுப்பூசி களுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனால் சீரம் இன்ஸ்டிடியூட் இந்தியா தயாரித்த தடுப் பூசிகளை போட்டுக்கொண்ட ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நாட்டில் இருந்து ஐரோப்பிய யூனியனில் உள்ள மற்ற நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# தி.மு.க. ஆட்சி 50 நாள்களை கடந்தும் அறிகுறியே இல்லை

## புகார் பெற்ற பெட்டிகள் எங்கே? — சீமான் கேள்வி



'தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று 50 நாள்களைகடந்தும் தமிழகத்தின் பிரச்சினைகள் தீர்வதற்கான அறிகுறிகள் இல்லை' என நாம் தமிழர்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விமர்சித்திருக்கிறார்.

இது தொடர்பாக டுவீட் பதிவொன்றைவெளியிட்டிருக்கும் சீமான், தி.மு.க. தான் எல்லாவற்றையும் தீர்க்கும் மாமருந்து தமிழகத்தின் அத்தனைப் பிரச்சினைகளுக்கும் தி.மு.க. ஆட்சியமைந்தவுடன் 100 நாள்களுக்குள் தீர்வு எட்டப்படும் என வானளவு அளந்தார்கள். 50 நாள்களைக் கடந்துவிட்டோம். பாதி காலக்கெடு முடிந்துவிட்டது.

என்னவாயின தமிழகத்தின் பிரச்சினைகள்? எப்போது எல்லாவற்றையும் தீர்க்கப் போகிறார்கள்? அதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லையே? மக்களின் பிரச்சினைகளைக் கடிதங்களாய்ப் பெற்ற அப்பெட்டிகள் எங்கே? அதனை எப்போது திறப்பார்கள்? சாவி தொலைந்து விட்டதா? இல்லை, பெட்டியே தொலைந்து விட்டதா? என அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

## இந்தியாவில் கடந்த 102 நாள்களுக்குப் பின்னர்

# நாற்பதாயிரத்தை விடவும் குறைந்த கொரோனாப் பாதிப்பு



கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலை இந்தியாவில் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியது. தினசரிப் பாதிப்பு பல நாள்கள் நான்கு லட்சத்தைத் தாண்டியது. தற்போது ஊரடங்கு, பொதுமுடக்கம், கட்டுப்பாடுகளால் இரண்டாவது அலை தொடர்ந்து குறைந்து வருகிறது என்று தரவுகள் கூறுகின்றன.

நேற்றைய தினம் தினசரி தொற்றுப் பாதிப்பு எண்ணிக்கை 46,148 ஆக உயர்ந்திருந்தது. கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி இற்குப் பின்னர், முதல் முறையாக நேற்று 1,000 இற்குக் குறைவாக கொரோனா உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் பதிவானது.

இந்த நிலையில், இந்தியாவின் மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதக 37, 566 பேருக்கு மட்டுமே தொற்றுப் பாதிப்பு உறுதியாகியுள்ளது. இதன்மூலம் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3,03,16,897 ஆக அதிகரித்துள்ளது. தொற்றுப் பாதிப்புகளுக்கு இந்த ஒரே நாளில் 907 பேர் மட்டும் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 3,97,637 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பில் இருந்து 56,994 பேர் குணமடைந்து இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இதனால், கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,93,66,601 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா தொற்றுக்கு தற்போது 5,52,659 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரியவந்துள்ளது.




# இந்திய–சீன எல்லையில் இராணுவம் குவிப்பு!

## போர் விமானங்கள், பீரங்கிகள் தயார் நிலையில்

இந்தியாவின் லடாக் பகுதியில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த ஆண்டு சீன – இந்திய இராணுவத்தினருக்கிடையே நடந்த மோதலில் இந்திய இராணுவ வீரர்கள் 20 பேர் உயிரிழந்தனர். இதனால் இந்தியா–சீனா எல்லைப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வந்தது. இதையடுத்து இருதரப்பிலும் படைகள் குவிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இருநாட்டு இராணுவ அதிகாரிகளுக்குமிடையே நடத்தப்பட்ட பல்வேறு சுற்றுப் பேச்சுகளுக்குப் பின்னர், எல்லையில் படைகள் ஓரளவு திரும்பப் பெறப்பட்டன. எனினும், சீன இராணுவத்தினரின் அத்துமீறல் தொடர்வ தாகவும் அவ்வப்போது பதற்றம் நிலவுவதால் படைகள் முழுமையாக விலக்கிக் கொள்ளப்படவில்லை என்றும் இந்தியா தெரிவித்துவந்தது.

சீன எல்லை யில் இப்போது இரண்டு லட்சம் இந்திய இராணு வத்தினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், கூடுதலாக மேலும் ஐம்பதாயிரம் வீரர்களை சீன எல்லையில் நிறுத்த இந்தியா முடிவு செய்துள்ளது. இந்திய எல்லைப் பகுதிக்குள் சீன இராணுவத்தினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் கூடுதல் படைகள் குவிக்கப்பட்டுள்ளன எனஇந்திய இராணுவ அதிகாரிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சீன எல்லைப் பகுதியில் 3 முக்கிய இடங்களில் இந்தியப் போர் விமானங்களும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன என கூறப்படுகிறது. அதே சமயம், சீன இராணுவமும் கூடுதலான படையினரை திபெத்தில் இருந்து தனது எல்லை இராணுவத் தளத்துக்கு அனுப்பி யுள்ளது. போர் விமானங்கள், நீண்ட தூரம் தாக்கும் பீரங்கிகள் போன்றவற்றையும் எல்லைப் பகுதியில் சீனா நிறுத்தியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# இந்தியாவில் பைஸர், மாடர்னா தடுப்பூசிகள் அனுமதிக்கான செயற்பாடுகளில் வேகம்




இந்தியாவில் தற்போது பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கொவேக்சின்' மற்றும் சீரம் இன்ஸ்டிடியூட் உருவாக்கிய 'கொவிஷீல்ட்' ஆகிய இரு தடுப்பூசிகளும் பயன்பாட்டில் உள்ளன. ரஷ்யாவின் 'ஸ்பூட்னிக்–வி' தடுப்பூசியின் பயன்பாட்டிற்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தச் சூழலில், கொரோனா வைரஸுக்கு எதிராக சர்வதேச அளவில் உருவாக்கப்பட்ட, பைஸர் மற்றும் மாடர்னா போன்ற தடுப்பூசிகளையும் அங்கீகரிப்பதற்கான செயல்முறைகளை விரைவுபடுத்தியிருப்பதாக இந்திய சுகாதார அமைச்சகத்தின் கொவிட் பணிக்குழுத் தலைவர் வி.கே.பால் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மருந்து நிறுவனமான பைஸர், இந்தியாவில் தனது கொரோனாத் தடுப்பூசிக்கு ஒப்புதல் பெறுவதற்கான இறுதிக் கட்டத்தில் இருப்பதாக கடந்த வாரம் தெரிவித்தது. இந்த தடுப்பூசியை பைசர், ஜேர்மன் நிறுவனமான பயோ–என்டெக் உடன் இணைந்து உருவாக்கியது. இது தொற்றுநோயைத் தடுப்பதில் 90 சதவீதத்திற்கும் அதிகமான செயல்திறனைக் கொண்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

# எல்லையோரக் கிராமங்களின் பெயர்களை மாற்றவேண்டாம்!

## கேரள முதல்வரிடம் கர்நாடக முதல்வர் கோரிக்கை

கர்நாடகா– கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள காசர்கோட் மாவட்டம் கேரளாவின் ஆளுகையில் உள்ளது. இந்த மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்களில் கன்னடம் பேசும் மக்கள் அதிகமாக வசித்துவருகின்றனர். கேரளாவின் உள்ளாட்சி அமைப்புகள் இந்தப் பிராந்தியத்தின் சில கிராமங்களின் பெயர்களை மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளன என செய்திகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

மதுரு என்ற கிராமத்தின் பெயரை மதுரம் என்றும், மல்லா என்பதை மல்லம் எனவும் ஏற்கனவே மாற்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது. கேரள அரசின் இந்த நடவடிக்கைக்கு கர்நாடக அரசியல் தலைவர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

கேரளா முதலமைச்சர் பினராயி விஜயனுக்கு கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா இவ்விவகாரம் குறித்து கடிதம் எழுதியுள்ளார் என்றும், அந்தக் கடிதத்தில் காசர்கோட் மற்றும் மன் ஜேஸ்வர மாவட்டங்களில் கர்நாடக எல்லையில் இருக்கும் கிராமங்களின் பெயர்களை மாற்றுவதை நிறுத்த வேண்டும் என்று எடியூரப்பா கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும், இந்தச் செய்தியை கேரள அரசு மறுத்துள்ளது. இது முற்றிலும் தவறான செய்தி என்றும் அவ்வாறான பெயர் மாற்றும் திட்டங்களெதுவும் தங்களுக்கு இல்லை எனவும் கேரள அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக கேரள முதல்வரின் உத்தியோகபூர்வ அறிக்கை விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பெய்லி வீதியில் அமைக்கப்படும் சிறுவர் பூங்கா; தனிநபருக்கு உரிமை கோரும் அதிகாரம் இல்லை

## மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாநகர சபையால் சிறுவர் நேய மாநகரத் திட்டத்தின் கீழ் பெய்லி வீதியில் அமைக்கப்பட்டு வரும் சிறுவர் பூங்கா மாநகர சபைக்கே சொந்தமானது எந்த ஒரு தனிநபருக்கும் உரிமை கோரும் அதிகாரம் இல்லை என மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையால் சிறுவர் நேய மாநகர திட்டத்தின் கீழ் பெய்லி வீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சிறுவர் பூங்கா குறித்து தவறான கருத்துகள் பரிமாறப்பட்டு வருகின்றன என இங்கு குற்றச்சாட்டப்பட்டதுடன் அது தொடர்பில் மாநகர முதல்வரினால் விளக்கமளிக்கப்பட்டது. குறித்த திட்டமானது முற்று முழுதாக மாநகரசபையினால் செறி நிறுவனம் மற்றும் ஐ.நா சிறுவர் நிதியம் ஊடாக முன்னெடுக்கப்படும் திட்டமெனவும் அதற்கு எந்த தனிமனிதருக்கும் தொடர்பில்லையென வும் முற்றுமுழுதாக மாநகரசபைக்குச் சொந்தமானது எனவும் இங்கு மாநகர முதல்வரினால் தெரிவிக்கப்பட்டது.



மட்டக்களப்பு மாநகரசபையின் கடந்த மாதத்துக்கான ஒத்திவைக்கப்பட்ட சபை அமர்வு நேற்றைய தினம் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் மாநகர சபை நகர மண்டபத்தில் கொரோனா நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சமூக இடைவெளியுடன் இடம்பெற்றது. இவ்வமர்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர சபை பிரதி ஆணையாளர், பொறியியலாளர், சபையின் பதில் செயலாளராகச் செயற்படும் நிருவாக உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே காரசாரமான கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் நஞ்சற்ற உற்பத்திகளை அதிகரிப்பதற்கான சேதன பசளை மூலமான உற்பத்தியை அதிகரிப்பதற்கு மாநகரசபையும் ஒத்துழைப்பு வழங்குவதற்கான வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மாநகர முதல்வரினால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கடந்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தப் படாமல் இருப்பதன் காரணமாக குறித்த வேலைத்திட்டங்களை விரைவாக முடித்ததன் பின்னர் இவ்வாண்டுக்கான திட்டங்களை விரைவாக ஆரம்பிப்பதற்கு சில திட்டங்களை மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக முன்னெடுப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

வட்டாரங்களில் உள்ள உறுப்பினர்களின் முழுமையான ஆலோசனைகளைப்பெற்று குறித்த வட்டாரங்களில் முடிக்கப்படாது உள்ள மேற்படி திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது குறித்து இங்கு ஆராயப்பட்டவேளையில் இது தொடர்பில் காரசாரமான கருத்துகளும் பரிமாறப்பட்டன.



## ஒந்தாச்சிமடம் கடற்கரையில் ஒதுங்கிய மற்றுமொரு ஆமை

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கிவரும் நிலையில் நேற்று திங்கட்கிழமை மாலை ஒந்தாச்சிமடம் கடற்கரையில் இறந்த நிலையில் கடல் ஆமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

ஆமை ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளதை அவதானித்துள்ள மீனவர்கள், இவ் விடயம் தொடர்பில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, அதன் பின்னர் அவ்விடத்துக்கு விஜயம் செய்த உத்தியோகத்தர்கள் ஆமையை பார்வையிட்டதுடன், அதனை பரிசோதனைகளுக்காக எடுத்துச்சென்றுள்ளனர்.



## ஏறாவூரிலிருந்து கொழும்புபோன பஸ் தடுத்து நிறுத்தப்பட்டு 31 பேர் கைது

பயணக்கட்டுப்பாட்டை மீறி ஏறாவூரிலிருந்து கொழும்புக்குப் பயணித்த பஸ்ஸொன்றை பொலிஸ் காவலில் எடுத்துள்ள பொலிஸார், பஸ்ஸின் சாரதி, நடத்துநர் உள்ளிட்ட 31 பேரை கைது செய்துள்ளனர்.

கம்பஹா– மிரிஸ்வத்த சந்தியில் வைத்து இன்று அதிகாலை பஸ்ஸை வழிமறித்துள்ள பொலிஸார் 31 பேரையும் கைது செய்துள்ளமையுடன் பஸ்ஸை பொலிஸ் காவலில் எடுத்துள்ளனர்.

கம்பஹா பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே பஸ்ஸுடன் 31 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருந்தாலும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்து அமுலிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## மட்டக்களப்பில் சில பகுதிகள் தனிமையில்

நாட்டில் மேலும் சில மாவட்டங்களுக்குட்பட்ட பல கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இன்று அதிகாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் கொழும்பு, கம்பஹா, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் காலி மாவட்டங்களுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தின் கொலன்னாவ காவல் துறைப்பிரிவுக்குட்பட்ட சிங்கபுர கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த கங்ஹிந்தசெவன தொடர்மாடி குடியிருப்பைதவிர்ந்த ஏனைய பகுதிகளும், கம்பஹா மாவட்டத்தின் களனி காவல்துறை பிரிவுக்குட்பட்ட கல்பொரல்ல 100 ஆம் தோட்ட கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

காலி இந்துருவ கோனகல கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பொல்தொடுவ கிராமம், அம்பாறை சம்மாந்துறை காவல்துறை பிரிவுக்குட்பட்ட புதிய வளத்தாப்பிட்டி கிராமம், மட்டக்களப்பு வாழைச்சேனை காவல்துறை பிரிவுக்குட்பட்ட மீராவோடை கிழக்கு, மேற்கு மற்றும் மாஞ்சோலை பதுரியா ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.



## அரச உயர் அதிகாரிகளுக்கு இரண்டாம் கட்டம் தடுப்பூசி

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அரச உயர் அதிகாரிகளுக்கு இராணுவத்தினரின் ஏற்பாட்டில் இரண்டாம் கட்ட சினோபோர்ம் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கொவிட் தடுப்பூசியினை மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட கொவிட் தடுப்பு செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் அவர்களுக்கும் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் சினோபோர்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டது. இக்கால கட்டத்தில் மக்களுக்கான சேவையினை தங்கு தடையின்றி வழங்க வேண்டுமென்பதற்காக மக்கள் மத்தியில் கடமையாற்றிவரும் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலகத்தின் கிளைத் தலைவர்களுக்கு இத் தடுப்பூசி ஏற்றப்பட்டிருந்தது.

இவர்களுக்கான முதற்கட்ட தடுப்பூசியானது கடந்த மாதம் 25 ஆந் திகதி ஏற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கோறளைப்பற்று மத்திய பிரிவில் முழு கிராமத்திற்கும் நிவாரணம்

கொரோனா காரணமாக தங்களது பொருளாதாரங்களை இழந்த மக்களுக்கு பிரதேச இளைஞர்களின் முயற்சியினால் பிரதேசத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் உலர் உணவு பொருள்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் மாவடிச்சேனை கிராமத்தில் உள்ள சமூக மட்ட அமைப்புக்களின் கூட்டிணைந்த முயற்சியினால் மாவடிச்சேனை அனர்த்த நிவாரண குழு என்ற பெயரில் பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்கள், விளையாட்டுக் கழகங்கள், சமுக மட்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்து இவ் வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளது.

மாவடிச்சேனை பிரதேசத்தில் உள்ள கூலி தொழிலாளர்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள் என்று அனைவருக்கமாக 1,150 குடும்பங்களுக்கு 2,100 ரூபா பொறுமதியான உலர் உணவுப் பொருள்கள் இருபத்து நான்கு லட்சத்து பதினைந்தாயிரம் ரூபா பெறுமதியில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

# உலகச் சம்பியன் பிரான்ஸ் அதிர்ச்சித் தோல்வி பெனால்டி ஷூட் அவுட்டில் சுவிட்ஸர்லாந்து வெற்றி

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் நொக்–அவுட் சுற்றில் இன்று அதிகாலை நடந்த போட்டியில் சுவிட்ஸர்லாந்து அணியிடம் உலக சம்பியனான பிரான்ஸ் அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது. பெனால்டி ஷூட் அவுட்டில் சுவிட்ஸர்லாந்து 5–4 என்று வெற்றி பெற்றது.

யூரோ கிண்ணத்தைக் கைப்பற்ற அதிக வாய்ப்புகள் கொண்ட அணி என்று பிரான்ஸ் அணி எதிர் பார்க்கப்பட்டது. அதற்கேற்றவாறு, இந்தப் போட்டியின் முதல் நேர அளவுக்குள் 3 கோல்களை பிரான்ஸ் அடித்தது. ஆனால், சுவிட்ஸர்லாந்தும் பிரான்ஸின் சவாலைச் சமாளித்து பதிலுக்கு 3 கோல்களை அடிக்க ஆட்டம் 3–3 என்று சமனானது.

ஆட்டம் தொடங்கி 15 ஆவது நிமிடத்தில் சுவிட்ஸர்லாந்து அணியின் ஹரிஸ் செஃபரோவிச் கோலடித்து பிரான்ஸுக்கு அதிர்ச்சியளித்தார். இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் 57 மற்றும் 59 ஆவது நிமிடங்களில் கரீம் பென்சீமா 2 கோல்களை அடிக்க பிரான்ஸ் முன்னிலை பெற்றது. 75 ஆவது நிமிடத்தில் போக்பா ஒரு பிரமாதமான கோலை அடிக்க பிரான்ஸ் வலுவான நிலையில் இருந்தது. ஆட்டம் முடிய 15 நிமிடங்கள் வரை 3–1 என்று முன்னிலை பெற்ற பிரான்ஸ், சுவிஸ் அணியின் சடுதியான எழுச்சியை எதிர்பார்த்திருக்கவில்லை.

81 ஆவது நிமிடத்தில் ஹரிஸ் செஃபரோவிச் இரண்டாவது கோலையும், கடைசி நேரத்தில் மரியோ காவ்ரனோவிச் மற்றொரு கோலையும் அடிக்க 90 ஆவது நிமிடத்தில் ஆட்டம் 3–3 என்று சமனானது.

வெற்றி–தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் கோலெதுவும் அடிக்கப்படாது சமநிலையிலேயே தொடர, ஆட்டம் பெனால்டி ஷூட் அவுட் முறைக்குச் சென்றது. இதில் சுவிட்ஸர்லாந்து 5–4 என்ற கோல்கணக்கில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

பெனால்டி ஷூட் அவுட்டுக்குச் சென்றாலே ஆட்டம் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் போகலாம் என்பது யதார்த்தம். இதில் பிரான்ஸின் மின்னல் வீரர் மபாப் பேயின் பெனால்டி அடியை சுவிட்சர்லாந்து கோல் கீப்பர் சரியாகக் கணித்து, பாய்ந்து தட்டிவிட்டார். இது பிரான்ஸின் இந்தமுறைக்கான யூரோ கனவைத் தகர்த்தது. காலிறுதியில் ஸ்பெயின் அணியைச் சந்திக்கிறது சுவிட்ஸர்லாந்து.

# விம்பிள்டன் டென்னிஸ் தொடர்; முதல் சுற்றில் ஜோகோவிச் வெற்றி



*கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டித் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில் நடப்புச் சம்பியனும் உலகின் முதல் நிலை வீரருமான செர்பியாவின் ஜோகோவிச்சும் இங்கிலாந்து நாட்டின் ஜக் ட்ராப்பரும் விளையாடியிருந்தனர்.*

*முதல் செட்டை ட்ராப்பர் கைப்பற்றினார். எனினும், இரண்டாவது செட்டில் அதிரடியாக விளையாடிய ஜோகோவிச், தொடர்ந்து மூன்றாவது, நான்காவது செட்களை வென்று அசத்தி, 4-6, 6-1, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் போட்டியில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

# கொரோனா தடுப்பூசியைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகளுக்கும் மருத்துவப் பணியாளர்களுக்கு டென்னிஸ் ரசிகர்கள் பாராட்டு

விம்பிள்டன் டென்னிஸ் போட்டித்தொடர் இங்கிலாந்தில் நேற்று ஆரம்பமானது. இதில் நடப்பு சம்பியன் நோவக் ஜோகோவிச் மற்றும் ஆன்டி மூரே இடையேயான போட்டி நேற்று நடைபெற்றது.

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் கட்டுக்குள் வந்துள்ளதால் இந்தப் போட்டியில் பார்வையாளர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். தடுப்பூசி செலுத்திக் கொண்டதால் ரசிகர்கள் முகக்கவசம் இன்றி வழக்கமான உற்சாகத்துடன் போட்டியைக் கண்டுகளித்தனர்.

இந்தப்போட்டியைக் காண்பதற்கு ஒக்ஸ்போர்ட்–அஸ்ட்ரா ஜெனெகா கொரோனாத் தடுப்பூசியைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் குழுவைச்சேர்ந்த டாக்டர் சாரா கில்பர்ட் வருகை தந்திருந்தார். அவருடன் கொரோனாத் தடுப்பூசித் தயாரிப்பில் முக்கிய பங்காற்றிய விஞ்ஞானிகளும் தேசிய



சுகாதாரச் சேவைப்பிரிவின் மருத்துவப் பணியாளர்களும் வந்திருந்தனர்.

கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கிய விஞ்ஞானி டாக்டர் சாரா கில்பர்ட் மற்றும் அவரது குழுவினர் விம்பிள்டன் போட்டியைக் காணவந்துள்ளார்கள் என போட்டி வர்ணனை யாளர்கள் ஒலிபெருக்கி மூலம் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து டென்னிஸ் மைதானத்தில் அமர்ந்திருந்த இரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று அவர்களுக்கு கைத்தட்டி பாராட்டு மற்றும் நன்றிகளைத் தெரிவித்தனர். இந்த நிகழ்வு விம்பிள்டனில் மிகவும் நெகிழ்ச்சி மிகுந்த தருணமாக அமைந்தது.

## கொரோனாத் தடுப்பு பாதுகாப்பு விதிமுறையை மீறிய

# இலங்கை வீரர்கள் இடைநீக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர்




குசல் பெரேரா தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து தலா மூன்று ரி–20 மற்றும் ஒருநாள் போட்டியில் விளையாடி வருகிறது. ரி–20 தொடரில் இலங்கை அணி 3–0 என்ற கணக்கில் தோல்வி கண்டது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது. இதற்கிடையே, இலங்கை அணி வீரர்கள் குசல் மெண்டிஸ், நிரேஷான் டிக்வெல்ல, தனுஷ்க குணதிலக ஆகியோர் கொரோனாத் தடுப்புப் பாதுகாப்பு வளைய (பயோ–பபிள்) விதிமுறையை மீறி டர்ஹாம் நகர வீதியில் நேற்று முன்தினம் இரவு சுற்றித் திரிந்துள்ளனர்.

இதனை அவர்களுக்கு தெரியாமல் தொலைபேசியில் வீடியோ எடுத்த இலங்கை ரசிகர் ஒருவர் சமூக வலைத்தளத்தில் பதிவிட, அது பரவலாகப் பகிரப்பட்டு சர்ச்சைக்குள்ளானது. இதனை அடுத்து கொரோனா தடுப்பு பாதுகாப்பு விதிமுறையை மீறிய மூன்று வீரர்களையும் இலங்கை கிரிக்கெட் சபைச் செயற்குழு அதிரடியாக இடைநீக்கம் செய்துள்ளது. அத்துடன் அவர்கள் உடனடியாக நாடு திரும்பவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திப்பிலி பகுதியில் காடழிப்பு மற்றும் காணி அபகரிப்பு செயலகக் காணி உத்தியோகத்தர்கள் உடந்தை?

## சமூக ஆர்வலர்களால் குற்றச்சாட்டு

**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவுமாவட்டத்தில்புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திப்பிலி குளத்தின் அலை கரையை அண்டிய பகுதியில்காடழிப்பு இடம்பெற்று காணிஅபகரிக்கப்பட்ட விவகாரத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் உடந்தையாக செயற்படுகின்றனர் என சமூக ஆர்வலர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



இந்தப் பகுதியில் காடழிப்பு இடம்பெறுவதாகத் தெரிவித்து சுமார் 20 நாள்களாகியும் குறித்த காணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்து 'அ' படிவம் கூட ஒட்டப்படவில்லை. இந்த இடத்தில் காணி அபகரித்தவர்களுள் பிரதேசசெயலக ஊழியர்களும் அங்குகின்ற மையால் காணிப்பகுதியினர் அவர்களுக்கு உடந்தையாக செயற்படுகின்றனர் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவில் உள்ள திப்பிலி குளத்தின் எல்லைக்கு உட்பட்ட மற்றும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வனவளத்



திணைக்கள எல்லைக்குட்பட்ட சுமார் 30 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் காடுகள் அழிக்கப்பட்டு காணி பிடிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

திப்பிலி குளம் புனரமைக்கப்படாத நிலையில் புனரமைப்பதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தின் கீழ் இந்த குளம் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் குளத்தை நம்பி சுமார் 25 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளது.

குளத்தின் ஒருகரை காட்டுப்பகுதியாக காணப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதி காடுகள் அழிக்கப்பட்டு குளத்துக்கு நீர்வரும் ஆறுகள் மூடப்பட்டு காணி அபகரிப்பு இடம்பெற்றுள்ளதோடு குளத்தின் அலை கரையில் அதிகளவிலான சட்டவிரோத மணல் அகழ்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குளத்தின் அலை கரை பகுதியில் அதிகளவான இடங்களில் பாரிய குழிகள் தோண்டப்பட்டு மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் திப்பிலி குளத்தின் கமக்கார அமைப்புக்களோ ஏனைய மக்களோ வெளியில் செல்லமுடியாத நிலையில்பயணத்தடைவிதிக்கப்பட்டுள்ள காலத்தில் குளத்திற்குச் சொந்தமான காணியில் காடுகள் அழிக்கப்பட்டு காணி பிடிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கிராம சேவையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் பிரதேச செயலாளருக்கும் கமக்கார அமைப்பினர் முறையிட்டுள்ளார்கள். இருப்பினும் குறித்த சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கு எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த பகுதிக்கு கனரக இயந்திரம் கொண்டு செல்வதற்கான அனுமதி எதுவும் பெறாத நிலையில் புதுக்குடியிருப்பை ச் சேர்ந்த வசதி படைத்தவர்கள், அரச உத்தியோகத்தர்களே இந்த காணிபிடிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனமக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை இந்த பகுதியில் அமைந்துள்ள வெறும் காணிகளை காணி இல்லாத கர்ணன் குடியிருப்பு மக்களுக்கு தலா அரை ஏக்கர் வீதம் விவசாய பயன்பாடுக்காக பகிர்ந்தளிப்பதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழுவிற்கு எடுத்து செல்லப்பட்டும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் இந்தக் காணிகள் வசதி படைத்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் குறித்த இடத்துக்கு 20-06-2021 ஆம் திகதி அன்று ஊடகவியலாளர்கள் சென்று நிலைமைகளை பார்வையிட்டு உரிய தரப்புக்களை தொடர்பு கொண்டு வினவினர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்த் தெரிவிக்கையில் –

கடந்த ஒரு மாதகாலமாக அரச காணி அபகரிக்கப்பட்டுள்ளது. இதனை அறிந்து கிராம சேவையாளர் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தார் பொலிஸார், வனவளத் திணைக்களத்துக்கும் தெரியப்படுத்தினார் இது ஒரு சட்டவிரோதமான செயற்பாடு. அரச காணியை சுத்தம் செய்வதற்கு கனரக இயந்திரங்கள் பாவிக்கப்பட்டுள்ளனஎனகிராமஅலுவலர்முறைப்பாடுசெய்துள்ளார். இதில் உள்ள யாரும் காணி பெற தகுதி உடையவர்களும் அல்லர் எனத் தெரிவித்தார். அத்தோடு இது தொடர்பாக பொலிஸாரிடமும் வனவள திணைக்களத்திடமும் முறையிட்டோம் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சட்டத்துக்கு முரணாக காணி அபகரிக்கும்போது பிரதேசசெயலகம் நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையிலும் ஏனைய திணைக்களங்களுக்கு அறிவித்ததாக சொல்லப்படுவது பொருத்தமானதாக இல்லாத போதும் பொலிஸார் தமக்கான எந்த முறைப்பாடும் செய்யவில்லை எனத் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் கமநல சேவை நிலையம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் வளவளத் திணைக்களம் ஆகியோருக்கு சொந்தமான காணிகள், காடுகள் அழிக்கப்பட்டு அபகரிக்கப்பட்டுள்ளன. சில காணிகளுக்கு வேலிகள் அமைக்கப்பட்டு தென்னை மரங்கள் நாட்டப்பட்டு கிணறு வெட்டப்பட்டு துரித அபிவிருத்தி இடம்பெறுகிறது. குறித்த காணி உரிமையாளர்கள் இவற்றைத் தடுக்கவில்லை என்பது அங்கு காணி அபகரித்தவர்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களும் செல்வந்தர்களும் என்பதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழை மக்கள் காணி அற்றவர்கள் அரை ஏக்கர் காணி வெட்ட அனுமதிகாதவர்கள் இவற்றை வேடிக்கை பார்ப்பது ஏன் என கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இடத்துக்கு ஊடகவியலாளர்கள் சென்று நிலைமைகளை கலந்துரையாடியதன் பின்னணியில் உடனடியாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கிராம அலுவலரால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் இயற்கை வள சுரண்டல்கள் அழிப்புக்களுக்கு இவ்வாறு ஒவ்வொரு திணைக்களங்களும் மற்ற திணைக்களங்களை சாடிவிட்டு செல்கின்ற நிலையில் வசதி படைத்த செல்வந்தர்கள் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை செய்துவருகின்றனர் என மக்கள் குற்றஞ்சாட்டுக்களை முன்வைத்தனர். இந்நிலையில் 22-06-2021 அன்று குறித்த இடத்தில் காடழிப்பில் ஈடுபட்ட நபர்களை விசாரணைக்கு அழைத்த புதுக்குடியிருப்பு பொலிஸார் எட்டு பேரை கைது செய்தனர்.

# சுவிஸ் அரசு வழங்கியது மருத்துவ உபகரணங்கள்

## பிரதமர் மஹிந்த நெகிழ்ச்சி

இலங்கைக்கு 4லட்சம்டொலர் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை சுவிட்சர்லாந்து அரசு வழங்கியுள்ளது. இலங்கைக்கான சுவிஸ்தூதுவர், பிரதமர் மஹிந்தராஜபக்ஷவிடம்இதனை கையளித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த உபகரணங்களை பிரதமரிடம் கையளித்தார். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை வெற்றி கொள்ளும் நோக்கில் இலங்கை மற்றும்தென்ஆபிரிக்கநாடுகளுக்கு சுவிஸ் அரசாங்கம் வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் அந்நாட்டு வெளி விவகார அமைச்சர் தெளிவுப்படுத்தியுள்ளார். கொவிட் வைரஸ் சவாலை வெற்றிக்கொள்ள அனைத்து நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். அப்போது தான் இந்தச் சவாலை வெற்றி கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நெருக்கடியான சூழ்நிலையில் வைத்திய உபகரணங்கள் வழங்கியமைக்கு சுவிஸ் அரசாங்கத்துக்கும், அந்நாட்டு மக்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நெகிழ்ச்சியுடன் நன்றிகளைக் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்குமிடையிலான நல்லுறவை தொடர்ந்தும் பலமிக்கதாக முன்னெடுத்து செல்வது பிரதான நோக்கமாகும் எனவும்பிரதமர்மஹிந்தராஜபக்ஷ கூறியுள்ளார்.

